பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 21 | சனிக்கிழமை | 06.01.2024 | அதிர்வு 158

## 19 நாள்களில் மட்டும் 26,252 பேர் சிக்கினர்

'யுக்திய ஒப்பரேஷன்' ஆரம்பிக்கப்பட்டு 19 நாள்களுக்குள் 26 ஆயிரத்து 252 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 134 பேர் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு 06



# ரணிலுக்குத் தக்க பாடம் புகட்டுவர் வடக்கு மக்கள்




## இப்படிக் கூறுகின்றது சஜித் அணி

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வடக்கு மாகாண மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வடக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.** 05

### வவுனியாவில் ஜனாதிபதியின் வருகைக்கு எதிராகப் போராடிய

# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவிக்கு விளக்கமறியல்

### ஆர்ப்பாட்டத்தை வீடியோ எடுத்த பெண்ணுக்குப் பிணை



(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதேவேளை, போராட்டத்தை 06

# தடம் மாறாக் கொள்கையுடன் பயணிக்கின்றது முன்னணி!

### குமாரின் நினைவேந்தலில் கஜேந்திரன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

தமிழின விடுதலைக்காகத் தடம் மாறாக் கொள்கையுடன் அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற ஒரே ஒரு தரப்பு நாங்கள்தான் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் நேற்று தெரிவித்தார். 05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டி கட்சியின் தலைவர் தேர்தல் நடைபெறப் போவதாக ஏற்பாடு. அது நடக்கின்றதோ, இல்லையோ கட்சிக்குள் ஜனநாயகம் மட்டும் கொழிக்கின்றது என்பேன்.

தேர்தல் முன்னேற்பாடாக களத்தில் இருக்கும் வேட்பாளர்கள் மாவட்டங்கள் தோறும் சென்று, கட்சியின் பொதுக்குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்து, 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# பூநகரிக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

வடக்கு மாகாணத்திதுக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிற்பகல் பூநகரி பிரதேசத்துக்கு விஜயம் செய்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட பூநகரி நகர அபிவிருத்தித் திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பூநகரி நகர அபிவிருத்திக்காக 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தித் திட்டங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தினார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க பூநகரி கோட்டையைப் பார்வையிட்டார்.

மேலும், பூநகரி பிரதேசத்தில் இயங்கி வரும் உயர்தர முந்திரி உற்பத்தி நிறுவனமான வன்னி கெசு முந்திரி உற்பத்தி நிறுவனத்துக்கு ஜனாதிபதி விஜயம் செய்து அதன் செயற்பாடுகளையும் அவதானித்தார்.

இயந்திரவியல் பொறியாளரான யுவதி ஒருவரால் நடத்தப்படும் இந்தக் கைத்தொழில் நிறுவனம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல இளையோர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் இங்கு அனைத்து நடவடிக்கைகளும் நடைபெறுவதோடு, கஜு சுத்தப்படுத்தலில் இருந்து அதன் இறுதி செயற்பாடு வரையில் பயன்படுத்தப்படும் அனைத்து இயந்திரங்களும் குறித்த யுவதியால் தயாரிக்கப்பட்டிருக்கின்றமை சிறப்பம்சமாகும்.

இந்தத் தொழில் நிறுவனமானது தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கும் பங்களிப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, இது நாட்டின் ஏனைய இளைஞர் யுவதிகளுக்கும் முன்னுதாரணமாகும் என்றும் குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட பலர் இக்கண்காணிப்பு விஜயத்தில் கலந்துகொண்டனர்.













# மல்லாகம் பகுதியில் நேற்று மாலை பொலிஸாரினால் விசேட சோதனை





யாழ்ப்பாணம் – மல்லாகம் பகுதியில் பொலிஸாரினால் விசேட சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதன்போது, யுக்திய 2024 சின்னம் பொறித்த ஸ்ரிக்கரும் ஒட்டப்பட்டது.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கருத்திட்டத்திற்கமைவாக நாடு பூராகவும் முன்னெடுக்கபடும் யுக்திய விசேட செயற்றிட்டம் நேற்று காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

மல்லாகம் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை ஆரம்பமான இந்த செயற்றிட்டத்தில்பொலிஸார்மோப்பநாய்சகிதம்விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். சோதனைக்குட்படுத்தபட்ட வாகனங்களுக்கு யுக்திய 2024 சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கரும் பொலிஸாரால் ஒட்டப்பட்டது.

மேற்படி யுக்திய சோதனை நடவடிக்கைகளில் காங்கேசன்துறை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், போக்குவரத்துப் பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.











# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல் யாழில் அனுஷ்டிப்பு

-எஸ்.நிதர்ஷன்-

ஆயுத்தாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல் யாழில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2000 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் 24 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றாகும்.

இதற்கமைய யாழ் கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நேற்று மாலை இந்த நினைவேந்தல் அனுஷ்டிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# பத்து வருடங்களாகத் தங்களுக்கு நியமனம் இல்லை ரணிலிடம் யாழ். பல்கலை பட்டதாரிகள் முறைப்பாடு!

பத்து வருடங்களிற்கு மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மற்றும் ஒருங்கிணைந்த சுகாதாரக் கற்கைகள் பீடத்திலிருந்து வெளியேறிய பட்டாதாரிகளிற்கு நியமனம் வழங்காத அவலம் தொடர்ந்து வருகின்றது.

இந்த விடயத்தை ஒட்டி, சித்த மருத்துவ மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார கற்கைகள் பீடங்களின் மாணவ பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முறையிட்டனர். தமது அவல நிலையை எடுத்துரைக்கும் மகஜர் ஒன்றைக் கையளித்து தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

வடமாகாணத்திற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையேயான விசேட கலந்துரையாடல்ஒன்றுயாழ்.ஜெற்விங்ஹோட்டலில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். இதன்போது மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

விடுதிகளில் உள்ள குறைபாடு, முகாமைத்துவ பீடத்திற்கான பஸ் வசதிகளை ஏற்படுத்தல், சித்த மருத்துவ துறையை பீடமாக தரமுயர்த்தல், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களுக்கான உள்ளக பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் இதன்போது மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 37 மாணவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவரான தமிழ் பெண் சுட்டுக்கொலை!



நோர்வேயின் எல்வெரும் பகுதியில் தமிழ் பெண் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என்று அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் வைத்தியசாலைக்கு வெளியே காரில் வைத்து குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது காரில் மற்றுமொரு நபரும் பலத்த காயங்களுடன் காணப்பட்டுள்ளார்.

அவரை மீட்ட பொலிஸார் ஒஸ் லோவில் உள்ள மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் கொலைசெய்யப்பட்ட யுவதி முப்பது வயதான ராகவி வரதராஜன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர், பல் மருத்துவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உயிரிழந்த பெண் பலமுறை உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டார் என்றும், அது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது எனவும் அறிய வருகின்றது.

எவ்வாறாயினும், இந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் உரிய கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நோர்வேயின் கொலை விகிதம் அதிகரித்துள்ளதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2023ஆம் ஆண்டில் அதிகமான மக்கள் (36 பேர்) கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு, வருடாந்த கொலை எண்ணிக்கை 30ஐத் தாண்டியது இதுவே முதல் முறையாகும். புத்தாண்டு தினத்திலிருந்து மேலும் ஆறு கொலைகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரணிலுக்குத் தக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாணத்துக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இந்த விஜயம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வாக்கு அரசியலுக்காகவே ஜனாதிபதி வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். அவரின் வருகையை வடக்கு மக்கள் விரும்பவில்லை. அவர்கள் வீதிகளில் நின்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராடுகின்றார்கள். ரணிலை வடக்கு மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு வடக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

வடக்கு மக்கள் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையே ஆதரிப்பார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு அதிகப்படியான வாக்குகளை வடக்கு மக்கள் அளித்தார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அதைவிடப் பெருமளவிலான வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்கு வடக்கு மக்கள் வழங்குவார்கள்.இம்முறை சஜித் பிரேமதாஸவின் வெற்றியில் வடக்கு மக்களின் பங்கு முக்கிய இடம் வகிக்கும்.” – என்றார்.

## தடம் மாறாக் கொள்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ஸ்ரீலங்கா அரசின் கொடூரமான அடக்குமுறைகளுக்கு எதிராகத் துணிந்து குரல் கொடுத்து வந்த மனிதர் குமார் பொன்னம்பலமே. தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தையும் துணிந்து குரல் கொடுத்து அவர் ஆதரித்து வந்திருந்தார்.

அவர் அரசியல் உரிமைகளுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் துணிந்து குரல் கொடுத்து வந்ததுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகவும், அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நமது இளைஞர்களை விடுவிப்பதற்காகவும் துணிந்து குரல் கொடுத்துச் செயற்பட்டு வந்திருந்தார்.

அவ்வாறு தமிழ் மக்களுக்காக அயராது உழைத்து கொள்கைக் பற்றுடன் செயற்பட்டு வந்த்தால்

அவரை அகற்ற வேண்டும் எனக் கருதி படுகொலை செய்திருந்தனர்.

அவருடைய இழப்பு என்பது ஈழத் தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு ஆகும். அத்தகைய ஒருவருக்கு மதிப்பளிக்கும் வகையிலே தேசியத் தலைவரால் மாமனிதர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அவர் மறைந்து 24 வருடங்கள் கடந்திருந்த போதும் போராட்டமும் மௌனிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்து இருக்கின்ற இன்றையநிலைமையில்விடுதலைக்கான அந்தப் பணியை எங்களுடைய அரசியல் இயக்கம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோதுதான் அவர் படுகொலை செய்யப்பட்டார். அவருடைய மகனார் அந்தக் கட்சியில் இருந்து கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற ஒரு இயக்கத்தை உருவாக்கி அந்த இயக்கம் இனத்தின் விடுதலைக்கான பணியை முன்னெடுத்து வருகின் றது.

தமிழர் தாயகத்திலே தாயகம், தேசியம், சுயநிர்ணயம், இறைமை என்கின்ற நிலைப்பாடுகளைக் கைவிடாமல் முன் கொண்டு செல்கின்ற ஒரே ஒரு இயக்கமாக எங்களது இயக்கம் மட்டும்தான் தடம் மாறாக் கொள்கையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நான் நினைக்கின்றேன் நாம் அவருக்குச் செய்வது அவருடைய படத்தை வைத்து விளக்குக் கொளுத்தி மாலை போடுவதற்கு அப்பால் அவர் எந்த இலட்சியத்தில் உறுதியாக இருந்தாரோ அந்தப் பணிகளைக் கொள்கையுடன் நாங்கள் அர்ப்பணிப்போடு முன்னெடுப்பதுதான்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்களது கருத்து நிலைப்பாட்டை விளக்கிப் பிரசாரம் செய்து வருகின்றனர். அதில்தான் ஜனநாயகம் செழிக்கின்றது என்றேன்.

களத்தில் இருக்கும் மூன்று வேட்பாளர்களின் ஒருவர் சிவஞானம் சிறீதரன். அவர் கடந்த வாரம் திருகோணமலையில் பொதுக்குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார். தமிழ்த் தேசியம் சார்ந்த அவரின் பேச்சு அங்கு எடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

இன்று மட்டக்களப்பில் உள்ள பிரதேசக் கிளைகள், வாலிபர் அமைப்பு, மகளிர் அமைப்பு சார்ந்த பிரதிநிதிகளை அவர் சந்திக்கின்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்புத் தொகுதிக் கிளைகளையே அவர் இன்று சந்திக்கின்றார். இதில் கல்குடா தொகுதிச் சந்திப்புதான் முக்கியமானது. ஏனெனில், அது எங்கு நடக்கின்றது தெரியுமா? இந்தத் தலைவர் தெரிவுக்கான தேர்தலில் சிவஞானம் சிறீதரன், சுமந்திரன் ஆகியோரோடு போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான சீனித்தம்பி யோகேஸ்வரனின் இல்லத்தில்தான்...!

தலைவர் தேர்தலில் போட்டியிட யோகேஸ்வரன் வேட்புமனுத் தாக்கல் செய்திருக்கின்றார். அதை அவர் வாபஸ் பெறவில்லை. தேர்தலில் நிற்பார் என்றே கூறப்பட்டு வருகிறது. இப்போது மற்றொரு வேட்பாளரான சிறீதரனின் பிரசாரத்திற்கான கூட்டத்தை அவர் தமது வீட்டிலேயே நடத்துகின்றார். அதுதான் தமிழரசு கட்சிக்குள் ஜனநாயகம் கொழிக்கின்றது என்றேன்.

எனது கூற்று தவறா நண்பர்களே...?

\+ + +

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருகோணமலையில் இடம்பெறும் பொங்கலை உள்ளடக்கிய தமிழர் கலை, கலாசார விழா இன்று ஆரம்பமாகின்றது. நாளையும், மறுதினமும் தொடர்கின்றது.

இந்த விழாவில் தமிழகத்தில் நடைபெறுவது போன்று ஏறு தழுவுதல் அல்லது ஜல்லிக்கட்டு இடம்பெறுகின்றது. கடந்த வருடங்களில் சம்பூரில் உள்ளூர் மக்கள் பொங்கலை ஒட்டி இந்த நிகழ்வை ஒரு சின்ன மட்டத்தில் நடத்தி இருந்தனர்.

இந்த முறை அதனை ஆளுநர் பெரும் எடுப்பாகச் செய்ய முற்பட்டுள்ளார்.

வன்னியில் சிக்கிய வளர்ப்பு மாடுகள், வண்டி மாடுகள் எல்லாம் சுற்றி வளைத்துப் பிடித்து, ஜல்லிக்கட்டு நடைபெறும் சம்பூருக்குக் கொண்டுவரப்பட்டு விட்டன என்று தகவல். இந்த மாடுகளை பிடிப்பவர்கள் யார் என்று கேட்கிறீர்களா? அந்த நிகழ்வைப் பார்ப்பவர்கள்தான் நம்மவர்கள்.

மாடுகள் வன்னியிலிருந்து கொண்டு வரப்பட்டமை போல, மாடுகளைப் பிடிக்கும் ஜல்லிக்கட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் இருந்து கூட்டி வரப்பட்டு உள்ளனர். இதற்கென ஐம்பது மாடுபிடி வீரர்கள் தமிழகத்தில் இருந்து விசேடமாக சம்பூருக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு திருவிழா தொடங்குகின்றது. தமிழக வீரர்களா? வன்னிக் காளைகளா? களம் சூடாக இருக்கும். ...!

ஆனால், கூனித்தீவின் நண்பர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசியில் பேசினார். வன்னி வளர்ப்பு மாடுகள் ஜல்லிக்கட்டுக்கு வளர்க்கப்பட்டவை அல்ல. அவை சில சமயங்களில் நாளை (இன்று) களத்தில் மாடுபிடி வீரர்களுடன் சேர்ந்து, அவர்களை அரவணைத்து, தமது முதுகை வீரர்களோடு உராய்ந்து, சொறிந்து கொண்டு நின்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றார் அவர்.

பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை.

இதற்குள் ஒரு கொசுறுத் தகவல். இந்த நிகழ்வுக்காக தமிழகத்தின் பிரபல சினிமா நடிகர் ஒருவர் விசேடமாக திருமலைக்கு வருகை தருகிறார் என்று ஒரு பேச்சு உள்ளது...!

## காணாமல் ஆக்கப்பட்டோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீடியோ எடுத்த பெண்ணை வவுனியா நீதிவான்நீதிமன்றம்பிணையில்விடுத்துள்ளது.

வவுனியாவுக்கு நேற்று காலை வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநகர சபை கலாசார மண்டபத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்களுடான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

ஜனாதிபதியின் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்துக்குச் செல்லும் பாதையில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவுக்கு நேற்று போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு வவுனியா நீதிவான் நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையிலும் அவரும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்துக்குள் செல்ல முற்பட்டனர். இதன்போது போராட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும், ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா மற்றும் போராட்டத்தை வீடியோ எடுத்த மீரா ஜாஸ்மின் ஆகிய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் நீதிமன்றக் கட்டளையை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்குப் பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் வவுனியா பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர் வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், போராட்டத்தை வீடியோ எடுத்த பெண்ணுக்குப் பிணை வழங்கியும் வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

## 19 நாள்களில் மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிமையான ஆயிரத்து 549 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய கடந்த 17 ஆம் திகதி 'யுக்திய ஒப்பரேஷன்' ஆரம்பமானது.

கடந்துள்ள 19 நாள்களில் 13 கிலோ 378 கிராம் ஹெரோயின், 9 கிலோ 436 கிராம் ஐஸ், 329 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

'யுக்திய ஒப்பரேஷன்' ஆரம்பிக்கப்பட்டு 19 நாட்களுக்குள் கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருள்களின் பெறுமதி 96 கோடி 30 இலட்சம் ரூபாவாகும்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஏமாறும் நிலை தொடரும்

இலங்கைத் தமிழர்களின் உண்மையான மன ஓட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி இருக்கின்றார் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் உப தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்.

தமிழர்களாகிய நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை நேரடியாக விசனத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் சுட்டிக் காட்டி இருக்கின்றார் .

சென்ற ஆண்டு தைப்பொங்கல் தினத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவ மக்கள் சார்பில் ஜனாதிபதி ரணிலைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியமையை திருமுருகன் நினைவு கூர்ந்தார்.

அப்போது திருமுருகனும் ஏனைய சைவப் பெரியார்களும் கூறியவற்றை செவிமடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர்களின் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து ஆவன செய்வார் என்று உறுதி கூறிச் சென்றார்.

இப்போது அடுத்த தைப்பொங்கல் வரப் போகின்றது. மீண்டும் ஜனாதிபதி விக்கிரமசிங்க யாழ். வந்துள்ளார். ஆனால் கடந்த தடவை தங்களுக்கு உறுதி தந்த எந்த விடயமும் இதுவரை கவனிக்கப்படவே இல்லை என்பதை திருமுருகன் வெளிப்படையாகவே விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றார்.

சைவ சமயப் பெரியார்களுக்கு அளித்த வாக்குறுதிகளைமட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் தாம் வழங்கிய வாக்குறுதிகளை தாம் நிறைவேற்றப் போகின்றவர் அல்லர் என்பதை தனது செயல்களாலும் போக்குகளாலும் தொடர்ந்து நிரூபித்து வருகின்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

அதிகார பகிர்வு, இனப் பிரச்சினைக்கான தீர்வு, யுத்தக் கொடூரங்களுக்குப் பொறுப்பு கூறல், காணாமல் போனோர் பிரச்சினை போன்ற சிக்கல்கள் நிறைந்த விடயங்களில் மட்டுமல்ல, சாதாரணமாக தமிழ் மக்களின் சின்னச் சின்னப் பிரச்சினைகள், விடயங்கள் போன்றவை தொடர்பில் கூடத் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் எண்ணப் போக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லை என்பதுதான் யதார்த்தப் புற உண்மை.

அவரது எண்ணமெல்லாம் - இலக்கு எல்லாம் - இப்போது ஒன்றே ஒன்று தான். அது - இன்னும் பத்து மாதங்களில் நடக்கப் போகின்ற அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தாம் எப்படி வெற்றி பெறுவது என்பது மட்டும்தான்.

அந்த வெற்றிக்குக் குந்தகம் ஏற்படாத விடயங்களை - செயல்களை - நடவடிக்கைகளை - மட்டுமே அவர் முன்னெடுப்பார். மற்றைய விடயங்களில் இறங்கி தமது வாக்கு வங்கியை குழப்பிவிட அவர் முயல மாட்டார் என்பது தெளிவானது.

வவுனியாவில் போய் நின்று, அடுத்த ஐந்து வருடத்திற்குள் முழு வட மாகாணமும் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்யப்படும் என்று பிரகடனப்படுத்துகின்றார் ரணில்.

அடுத்த பத்து மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல். அதன் பின்னர் ஜனாதிபதி பதவியில் அவர் தொடர்வாரா என்பதே சந்தேகம்தான். அப்படி இருக்கையில் அவர் ஐந்து வருடங்களில் வடக்கின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது குறித்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்.

மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட வடக்கு மாகாண சபை செயலிழந்து ஐந்து வருடங்கள் கழிந்து விட்டன. மாகாணத் தேர்தல்களே ஆறு, ஏழு வருடங்களாக இல்லை. அந்தத் தேர்தல் முறைமையை செயலிழக்க வைத்த பிரதான சூத்திரதாரியே ரணில் விக்கிரமசிங்கதான். தாம் பிரதமராக இருந்தபோது தெற்கில் இரண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு - மக்கள் தீர்ப்புக்கு முகம் கொடுப்பதற்கு - அஞ்சி, அந்தத் தேர்தல்முறைமைக்கானசட்டத்தையே இல்லாதொழித்த பிரதான பிரகிருதி அவர்தான்.

இப்போது தேர்தல்களே நடக்காத அந்த மாகாண சபை மூலம், மாகாண அபிவிருத்தி செய்வது குறித்து இல்லாத இடத்துக்கு செல்லாத பாதை வழியே எங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார் அவர்.

ரணில் போன்ற தலைவரின் கைகளில் தென்னிலங்கை ஆட்சிப் பீடம் நீடிக்கும் வரை, செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் கூறுவது போல, தமிழர்கள் ஏமாற்றப்படும் துன்பியல் நிலை தொடரவே செய்யும்.




# பொதுநலவாய சபாநாயகர்கள் மாநாடு: சபாநாயகர் மஹிந்த யாப்பா பங்கேற்பு

பொதுநலவாய அமைப்பின் சபாநாயகர்களின் 27 ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உகண்டாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.



இதன்போது அவர் உகண்டாவின் ஜனாதிபதி யோவேரி முசவேனி, பிரதமர் ரொபின் நபஞ்ஜ மற்றும் உகண்டா சபாநாயகர் அனிடா அனெத் அமங் ஆகியோரைச் சந்தித்துள்ளார்.

அத்துடன், சபாநாயகருக்கும் உகண்டாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஓரியம் ஹென்றி ஒய் கெலோ ஆகியோருக்கும் இடையிலும் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புக்களில் இலங்கைக்கும் உகண்டாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தவும், ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் அதிகரிப்பது உள்ளிட்ட பரஸ்பர விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் உகண்டாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வி.கணநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த புதன்கிழமை முதல் நேற்று வரை உகாண்டாவின் கம்பாலாவில் நடைபெறும் பொதுநலவாய அமைப்பின் சபாநாயாகர்களின் 27 ஆவது மாநாட்டில் பங்கேற்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவினர் கடந்த ஜனவரி 03 ஆம் திகதி உகண்டா சென்றிருந்தனர்.

இந்த மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்கள் பங்கேற்கின்றனர். 1969 ஆம் ஆண்டு கனடாவின் அப்போதைய சபாநாயகர் லூசியன் லாமோரியக்ஸின் முயற்சியில் இந்த மாநாடு ஆரம்பிக்கப்பட்டது.





# சோமாலியாவில் 15 இந்தியர்களுடன் சரக்கு கப்பல் கடத்தப்பட்டுள்ளது





சோமாலியா அருகே 15 இந்தியர்களுடன் சரக்கு கப்பல் ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

மத்திய ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சோமாலியாவின் கடற்பகுதியில் ஆஐ டுஜடுயு மேுசுகுமுடுமு என்ற சரக்கு கப்பல் நேற்று முன்தினம் மாலை கடத்தப்பட்டுள்ளது என இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

லைபீரிய நாட்டின் கொடி பறந்த ஆஐ டுஜடுயு மேுசுகுமுடுமு என்ற சரக்கு கப்பல் சோமாலியாவின் கடற்பகுதியில் கடத்தப்பட்டதாகவும், இந்த கப்பலில் 15 இந்தியர்கள் உள்ளனர் என்றும் இந்திய கடற்படைக்கு தகவல் கிடைத்துள்ளது.

அடையாளம் தெரியாத 6 பேர் கொண்ட குழுவினர் ஆயுதங்களுடன் வந்து கப்பலை கடத்தியதாக தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, கடத்தப்பட்ட சரக்குக் கப்பல் இருக்கும் இடத்தை நோக்கி இந்திய கடற்படை விமானம் அனுப்பப்பட்டுள்ளது. கடற்பாதுகாப்புக்கு உதவும் ஐ.என்.எஸ். சென்னை என்ற போர்க் கப்பலும் திருப்பிவிடப்பட்டுள்ளது.

இந்திய கடற்படை விமானம், கடத்தப்பட்ட கப்பல் இருக்கும் இடத்தை நேற்று அதிகாலை கண்டறிந்து அதனை கண்காணித்துக்கொண்டிருக்கும் நிலையில், ஐ.என்.எஸ். சென்னை போர்க்கப்பலும் நெருங்கிவிட்டதாக இந்திய கடற்படை அறிவித்துள்ளது.

மேலும், சர்வதேச பங்குதாரர்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து இப்பகுதியில் வணிகக் கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய கடற்படை உறுதி யாக உள்ளதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

# வெள்ள நிவாரணமாக மத்திய அரசு 2,028.31 கோடி ரூபா வழங்கவேண்டும்

## - உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்

தமிழகத்தில் மிக்ஜாம் மற்றும் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகளை சீர் செய்ய மத்திய அரசு உடனடியாக 2,028.31 கோடி ரூபா நிதி வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட நான்கு மாவட்டங்களிலும் கன மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை தேசிய பேரிடராக அறிவித்து, தமிழகத்துக்கு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியில் இருந்து தமிழகத்துக்கு உடனடியாக 2 ஆயிரம் கோடி ரூபா நிதி வழங்க, மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி மதுரையை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஆனந்தராஜ் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வழக்கில் தமிழக வருவாய் மற்றும் பேரிடர் துறை செயலாளர் உயர் நீதிமன்ற கிளையில் நேற்று முன்தினம் பதில் மனு தாக்கல் செய்தார்.



அந்த மனுவில், “சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மிக்ஜாம் புயலால் 2 நாட்களாக கன மழை பெய்தது. இந்த மழையால் சென்னையில் பெரும்பாலான பகுதிகள் நீரில் மூழ்கியது. 1 கோடிக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளானது.

மாநில அரசின் தீவிர முன் தடுப்பு நடவடிக்கை காரணமாக உயிரிழப்புகள் குறைக்கப்பட்டன. புயல் சேதத்தை பார்வையிட வந்த மத்தியக்குழுவிடம் வாழ்வாதார உதவி மற்றும் தற்காலிக மறுசீரமைப்புக்காக 7,033 கோடி ரூபாவும், நிரந்தர மறுசீரமைப்பிற்காக 12,659 கோடி ரூபாவும் தேவை என கோரிக்கை வைக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 24 மணி நேரத்தில் 90 சதவீதத்துக்கும் அதிக மழை பெய்தது.

இதனால், பெரும் பாதிப்பு ஏற்பட்டு விமானப்படை, கடற்படை, கடலோர காவல்படை உதவியுடன் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தென் மாவட்டங்களில் மழை சேதங்களை சரிசெய்ய உடனடி நிவாரணம் மற்றும் தற்காலிக மறுசீரமைப்பு மற்றும் நிரந்தர சீரமைப்புக்கு 9,602.38 கோடி ரூபா என மொத்தம் 18,214.52 கோடி ரூபா கேட்டு மத்திய அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டது.

மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து 1200 கோடி ரூபா விடுவிக்கப்பட்டது. தற்போது மாநில பேரிடர் நிவாரண நிதியில் 427.97 கோடி ரூபா தர வேண்டியதுள்ளது. இப்பணத்துடன் இரட்டை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார உதவிக்காக 2,028.31 கோடி ரூபாவை தமிழக அரசுக்கு மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும். “ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மியன்மாரில் 114 வெளிநாட்டவர்கள் அடங்கலாக 9 ஆயிரத்து 652 கைதிகளுக்கு பொது மன்னிப்பு



மியன்மாரில் சுதந்திர தினத்தை யொட்டி 9 ஆயிரத்து 652 கைதிகளை விடுவிக்க அந்த நாட்டு இராணுவ அரசு தீர்மானித்துள்ளது.

பிரித்தானியாவிடம் இருந்து மியன்மார் சுதந்திரம் பெற்ற 76 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 9 ஆயிரத்து 652 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக மியன்மார் இராணுவக் குழுவின் தலைவரும், மூத்த தளபதியுமான மின் ஆங் ஹலைங் அறிவித்துள்ளார்.

மியன்மார் சிறையில் உள்ள 114 வெளிநாட்டவர்களுக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் நாடு கடத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்த்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள மூத்த அரசியல்வாதியும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி உட்பட ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து இதுவரை எவ்வித தகவலும் வெளியாக வில்லை.

மியன்மாரின் 76 ஆவது சுதந்திர தினம் ஜனவரி 4 ஆம் திகதி முதல் கைதிகள் விடுவிப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இன்னும் சில தினங்களுக்கு இது தொடரும் என கூறப்பட்டுள்ளது.

# நியூசிலாந்து நாடாளுமன்றத்தை அதிரவைத்தார் இளம் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் மைபி




நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் 21 வயதான இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆற்றிய உரை தற்போது சமூக ஊடகங்களில் பரவலாக பகிரப்பட்டு வருகிறது.

ஹக்கா எனப்படும் பாரம்பரிய வெற்றி முழக்கத்துடன் அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை காண்போரை மெய்சி லிர்க்க வைக்கிறது.

ஹனா-ரவ்ஹிதி மைபி-கிளார்க் எனும் மேற்படி பெண் கடந்த 170 வருடங்களில் நியூசிலாந்து வரலாற்றில் பதிவான முதல் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.

நியூசிலாந்தின் ஆக்லேண்ட் மற்றும் ஹெமில்டனுக்கு இடையில் உள்ள குண்டலி எனும் சிறிய நகரத்தை சேர்ந்த இவர், கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நாடாளுமன்றத்திற்கு தெரிவா கியுள்ளார்.

மாவோரி பழங்குடி இனத்தை சேர்ந்த இவர் நியூசிலாந்தின் பழங்குடி மக்களின் உரிமைகளுக்காக போராடி வருகிறார்.

இந்த நிலையில், மைபி-கிளார்க் கடந்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் பாரம்பரிய முறையில், 'ஹாக்கா' அல்லது 'போர் முழக்கம்' செய்து தனது மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

அந்த வாக்குறுதியில், "உங்களுக்காக இறப்பேன். ஆனால், உங்களுக்காக வாழவும் செய்வேன்" என அவர் கூறினார் என அந்த நாட்டு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

நியூசிலாந்தை பொறுத்தவரை ஹக்கா நடனம், நியூசிலாந்து மாவோரி பழங்குடியினரின் ஆதி பழக்கங்களில் ஒன்று. போர், வெற்றி, ஒற்றுமை, இன குழுவின் பெருமை என எல்லாவற்றையும் சொல்ல அவர்கள் இதனை பயன்படுத்துகின்றனர்.

# ஜப்பான் நிலநடுக்க உயிரிழப்பு 92 ஆக அதிகரிப்பு!

ஜப்பானில் புத்தாண்டு தினத்தன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 92 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 242 பேரைக் காணவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் மேற்கு கடற்கரையில் சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்ட 72 மணி நேரத்திற்குப் பிறகு ஒரு பெண், தற்போது இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறார்.

மக்கள் தற்போது 34 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர் என கூறப் படுகிறது. அதோடு அவர்கள் வெளியில் சுகாராதமற்ற முறையில் வசிப்பதால், அவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்பிருப்பதாக நிபுணர்கள் எச்சரித் துள்ளனர். அவர்களில் பலர் வயதானவர்கள் என்று கூறப்படுகிறது.





# தொடர்ந்தும் நாங்கள் ஏமாற்றப்படுகின்றோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆறு.திருமுருகன் விசனத்துடன் கடிதம்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறையாவது எமது கோரிக்கையை கருத்திற்கொள்ள வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



தொடர்ந்தும் நாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என அவர் விசனத்துடன் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சென்ற ஆண்டு தைப்பொங்கல் தினத்தில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சைவ மக்கள் சார்பில் தங்களை சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அவ்வேளை தங்களிடம் விடுத்த வேண்டுதல்கள் எதுவும் நிறைவேறவில்லை.

1. இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தர தீர்வு காணுதல்.

2. வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள பொதுமக்களின் நிலங்களை விரைவில் விடுவித்தல்.

3.கீரிமலை காங்கேசன்துறை வீதியில் ஜனாதிபதி மாளிகை அமைப்பதற்காக அப்பகுதியில் உள்ள சைவ ஆலயங்கள் மடங்கள் அழிக்கப்பட்டு விட்டன. மீளவும் அவ்விடங்களில் பொதுமக்கள் சென்று தமது வழிபாட்டு இடங்களை உரிய முறையில் பயன்படுத்த அனுமதிக்குமாறு வேண்டப்பட்டது.

4. காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியில் இருந்த சுக்கிரவார திருகோணச் சத்திரம் இடிக்கப்பட்டுள்ளது. அந்நிலம் தல்செவன இராணுவ ஹோட்டல் பயன்பாட்டில் இருந்து மீளவும் சைவ சமய மடம் அமைப்பதற்கு நிலத்தை கையளிக்க வேண்டும்.

5. கிளிநொச்சி, இயக்கச்சி பகுதியில் பொதுமக்களின் காணிகள் பல இராணுவ முகாம்களாக உள்ளன. அவை எதுவும் மீளவும் பொதுமக்களிடம் கையளிக்கப்படவில்லை. அவற்றை கையளியுங்கள்.

இவ்விடயங்கள் தொடர்பாக தாங்கள் உடன் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறி ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இவற்றில் எவையும் தங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டனவாக இல்லை. இம்முறையாவது இவற்றை கருத்திற் கொண்டு மனிதாபிமான ரீதியில் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வாருங்கள்.

தாங்கள் பதவியேற்றவுடன் பகிரங்கமாக அறிவித்தீர்கள் விரைவில் தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதாக. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித முயற்சியும் நடைபெறுவதாக நாம் அறியமுடியவில்லை. நாம் தொடர்ந்து ஏமாற்றப்படுகிறோம். - என்று உள்ளது.



# அடுத்த 5 வருடங்களில் வடக்கு மாகாணம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படுமாம்!

## வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கி.வசந்தரூபன்)

வடமாகாணம் அடுத்த 5 வருடங்களில் ஒரே திட்டத்தின் கீழ் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதாரத்திற்கு ஐம்பது வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் மேல்மாகாணமே இன்றைய நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான இயந்திரம். தெற்கு, வடக்கு, மத்திய மாகாணங்கள் என 05 பிரதான இயந்திரங்களின் கீழ் நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு உழைத்து வருகின்றோம்.

வவுனியா, மன்னார் மற்றும் முலைத்தீவு மாவட்டங்களில் கல்வி, சுகாதாரம், புனர்வாழ்வு, நிலம், மின்சாரம், நீர், சுற்றுலா, வனப் பாதுகாப்பு மற்றும் கடற்றொழில் ஆகிய துறைகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து இங்கு பரந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டமையுடன், அப்பிரச்சினைகள் சிலவற்றிற்குத் தீர்வுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்நாட்டில் கொழும்பு, கண்டி மற்றும் வட மாகாணம் ஆகிய மூன்றும் பிரதான கல்வி நிலையங்களாக நியமிக்கப்படவுள்ளன.

நம் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரே ஒரு இயந்திரம்தான் இருந்தது. அதுதான் மேற்கு மாகாணம். இந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு மேல் மாகாணம் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கி வருகிறது. பிற மாகாணங்களின் பொருளாதாரப் பங்களிப்பு பின்தங்கிய நிலையில் உள்ளது. ஒரு நாடாக வேகமாக வளர, பொருளாதாரத்தை வழிநடத்தும் இயந்திரங்களின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும்.

மற்ற மாகாணங்களிலும் வலுவான பொருளாதாரம் இருக்க வேண்டும். அதற்காக பல மாகாணங்களை அடையாளம் கண்டுள்ளோம். தெற்கு, வடக்கு, மேற்கு, மத்திய மற்றும் வட மேற்கு மாகாணங்கள் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு விரிவான பங்களிப்பை வழங்கும் மாகாணங்களாக கட்டியெழுப்பப்பட வேண்டும்.

நாட்டில் தற்போது நிதொ பலம் இருப்பதால், இடைவழியில் நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்க முடிந்தது. மேலும், வெளிநாட்டு உதவியில் செயல்படுத்தப்படும் திட்டங்களும் அதே உதவியைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

மேலும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு வடமாகாணத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் சாத்தியம் உள்ளது. வடக்கு மாகாணத்தில் காற்று மற்றும் வெப்ப நிலைகளின் படி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

வடமாகாணத்தில் இருந்து உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை கணக்கிட்டால் நாட்டின் ஏனைய பகுதிகளை இந்தியாவிற்கு விண்ணப்பித்து பணம் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான விவாதங்கள் இப்போதுதான் தொடங்கியுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள் மிகவும் திறமையான மற்றும் திறமையான குழுவாக உள்ளனர். விவசாய ஏற்றுமதிக்கு நாட்டை தயார்படுத்துவதில் அவர்களுக்கு வலுவான நம்பிக்கை உள்ளது. விவசாய மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் விவசாய நிலங்களை முகாமைத்துவப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க முடியும். – எனத் தெரிவித்தார்.






**உரலார் கேள்வி :- 2024 பிறந்திருக்கிறது. அது பற்றி என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** பிறந்த புத்தாண்டால் உலகம் நன்மை அடைய வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. ஆனால் தீர்க்கதரிசிகள் பலர் இவ் ஆண்டைப்பற்றிப் பல அச்சமூட்டும் செய்திகளைப் பதிவுசெய்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். பல் கேரியாவைச் சேர்ந்த 'பாபாவாங்கா', பிரான்ஸைச் சேர்ந்த 'நாஸ்ராடம்ஸ்' எனும் தீர்க்கதரிசிகள் வெளிப்படையாகவும் குறிப்பினாலும் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கும் எதிர்காலக் கணிப்



புக்களில் 80வீதமானவை நிஜமாகி வருகின்றன எனச் சொல்லப்படுகிறது.

அந்த இருவருமே 2024 ஆம் ஆண்டு பற்றிச் சொல்லியிருக்கும் விடயங்கள் அச்சமூட்டுபவையாக இருக்கின்றன. இந்த ஆண்டில், உலகின் ஒழுங்கை மாற்றப்போகின்ற பெரும் போர் மூளும் என்றும், இயற்கை அனர்த்தங்களால் பேரழிவுகள் நிகழும் என்றும், வெளிக்கிரகவாசிகளின் வருகை நடைபெறும் என்றும், உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்றும், அவர்கள் பல கவலை தரும் விடயங்களைச் சொல்லி விட்டுப் போய் இருக்கிறார்களாம்.

உலகம் என்னாகப் போகிறதோ? என்று அச்சமாக இருக்கிறது. போதாக்குறைக்கு, ஜப்பானில் வருசத் தொடக்கத்தன்றே 7.5 ரிக்டேர் அளவிலான பெரிய பூமியதிர்ச்சி வேறு வந்து தொலைத்திருக்கிறது. வழக்கத்துக்கு மாறாக அப் பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து 155 தரம் நிலநடுக்கம் வந்ததாகவும் சொல்கிறார்கள். அங்கு மறுநாளே பெரிய விமான விபத்து வேறு நடந்திருக்கிறது.

நம் மூதாதையர்களும் அறத்தின் சிதைவால் உலகில் அழிவுகள் நிகழும் என்று முன்னரே சொல்லிப் போயிருக்கிறார்கள். உலகம் பூராகவும் அனைவரும் அறத்தினைச் சிதைக்கத் தொடங்கியிருக்கும் இன்றைய நிலையில், அந்தத் தீர்க்கதரிசிகள் சொன்னவை நடக்க வாய்ப்பிருப்பதாகவும் நாம் நினைக்க வேண்டியே இருக்கிறது. இறைவனைப் பிராத்திப்போம்.

**சல்லடையார் சலிப்பு :- அப்ப எல்லாருக்கும் பரலோகக் கதிதானோ?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார்கேள்வி :-75 ஆண்டுகளைக் கடக்கும் தமிழரசுக்கட்சி பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**உலக்கையார் பதில் :-** 1949 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இன்று அக் கட்சி தனது 75 ஆவது அகவையைக் கடக்கிறது. மகிழ்ச்சி தான்! 'உரிமைமீட்பு' என்கின்ற மகுட வாசகத்தின் கீழ் இயங்கும் இவர்களால் தமிழ் மக்களின் உரிமைகள் ஏதும் இன்று வரை பெரிய அளவில் மீட்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இறந்தகாலத்தை விட்டுத் தள்ளுவோம். அப்போது கட்சி, கட்டுப்பாடாகவாவது இருந்தது. இன்று அந்த நிலையும் மாறிவிட்டது. ஒரு தலைமைக்குக் கீழ் இயங்குகிற கட்சிதானா இது என்று கேட்கும்படியாக அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களும், இக் கட்சிக்கு ஒரு தலைவர் இருக்கிறாரா என்று கேட்கும் படியாக அக் கட்சியின் மூத்த தலைவர்களும் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

கட்சியால் வழங்கப்படும் பதவிகளுக்கு யார், யார் எதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது பற்றி எவர்க்கும் தெரியவில்லை. முக்கிய கொள்கை விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம் இஷ்டத்திற்கு வாய்க்கு வந்தபடி பகிரங்கமாக அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாவை சேனாதிராஜா அவர்கள் பெயரளவிலேயே தமிழரசுக் கட்சியின் தலைவரகச் செயற்பட்டார். தமிழரசுக் கட்சியின் சார்பாக, கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கச் சென்ற சம்பந்தரே, அக்கட்சி பற்றிய முழு முடிவுகளையும் எடுத்து வந்தார்.

**(14ஆம் பக்கம் பார்க்க)**

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாடுகள் ஏற்படுகிற பொழுது துணிந்து முடிவெடுக்காமல் பிரச்சினைகளைத் தள்ளிப் போடுவதையும், சமாளிப்பதையுமே தன் வழி முறையாக அவர் காட்டிக் கொண்டிருக்கிறார்.

எல்லா விடயங்களிலும் இறுதி முடிவெடுக்கும் அவர், தன் முடிவுகளுக்கான காரணத்தை மக்கள் மன்றிற்கு உரைப்பதும் இல்லை, அம் முடிவுகள் தோற்கும் போது அதற்கான பொறுப்பினை ஏற்பது மில்லை. கூட்டமைப்பை உடைத்துச் சிதறவிட்ட ஒன்றேதான் அவர் உருப்படியாகச் செய்த ஒரே காரியம். இவர் தலைமையால் தமிழினம் வெட்கித் தலை குனிகிறது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தொடக்கிய இக்கட்சியின் தலைவர்கள் எல்லாம் ஆயுதப் போராட்டம் தொடங்கியதும் எங்கெங்கோ சென்று ஒழிந்து விட, அப்பாவித் தமிழ் இளைஞர்கள்தான் தம்மை அர்ப்பணித்து அப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.



இறுதி நிலையில், பதவிகளோடு மீண்டும் வந்து ஒட்டிக் கொண்ட இக் கட்சியின் தலைவர்கள், போர் முடிந்த இந்த 14 ஆண்டுகளில், அந்த இளைஞர்க ளின் தியாகத்தைத் தமக்கு வாய்ப்பாக விலைபேசி தமிழ் மக்களை ஏமாற்றி, பதவிச் சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் ஏகோபித்த தலைமையாகத் தம்மை அறிவித்துக் கொண்டிருக்கும் இக்கட்சியினர், இன்று வரை, தமது கட்சியையே அரசியல் ரீதியாக வலுவடையச் செய்யவில்லை. நாளுக்கு நாள் கட்சி பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது பற்றி அங்கு யாரும் கவலைப்படுவதாய்த் தெரிய வில்லை. கட்சியின் அந்த நலிவைத் தமக்கு வாய்ப் பாகப் பயன்படுத்திக் கொண்டு வெட்கமின்றி அதன் தலைவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தம் கட்சியையே வலுவடையச் செய்யாத இவர்களா தமிழினத்தை வலுவடையச் செய்யப் போகிறார்கள் என்று கேட்க வேண்டியிருக்கிறது.

இவர்கள் நமக்கு உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டாம். முதலில் ஒரு கட்சியை எப்படி நடாத் துவது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும். 75 ஆண்டுகளைக் கடந்துவிட்ட ஒரு கட்சிக்கென்று, சொந்தமாக ஒரு நிரந்தரத் தலைமையகக் கட்டடம் இல்லை. கட்சி உறுப்பினர்களுடன் பேசிப்பார்த்த அளவில், அக் கட்சிக்கென்று பெரியளவிலான ஒரு வைப்பு நிதியும் இருப்பதாய்த் தெரியவில்லை. அதனால்தான் பணம் தர எவர் முன் வந்தாலும் 'எதையோ கண்ட எதுவோ போல வாலை ஆட்டிக் கொண்டு ஓடுகிறார்கள்'. அது மட்டுமல்லாமல் கட்சியை நெறி செய்வதற்கான சமூக அக்கறையுள்ள பிரமுகர்களின் வழிகாட்டுக் குழு என்று எதுவும்கூட இன்றுவரை இக் கட்சிக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. நாடாளுமன்றப் பதவிகளைத்தான் தமது ஒரே பலமாகக் கருதிக் காலம் கழித்து வருகிறார்கள்.

இந் நிலையில் இக் கட்சி தனது 75 ஆவது ஆண்டு நிறைவில், வெற்றிநடை போடுவதாய்ச் சொல்ல முடியவில்லை.

**சல்லடையார் சலிப்பு :-கட்சியால் தலைவர் தள்ளாடுகிறாரா?, தலைவரால் கட்சி தள்ளாடுகிறதா?**
**'யார் அங்கே இந்தக் கேள்விக்குச் சரி யான பதில் உரைப்பவருக்கு ஆயிரம் பொற் காசுகள் தரப்படும் என்று அறிவி யுங்கள்'. ஹி.ஹி.ஹி...!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார்கேள்வி:- புதிதாகத் தேர்ந்தெடுக்கப் போகிற தமிழரசுக்கட்சியின் தலைவருக்கு நீங்கள் என்ன ஆலோசனை சொல்ல விரும்பு கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** நான் ஆலோசனை சொல்லி என்னாகப் போகிறது? ஆனாலும் மனத் திலுள்ள சில விடயங்களை மட்டும் கீழே தருகிறேன்.

■ உடனடியாக வடக்கிலும், கிழக்கிலுமாக பெரிய அளவிலான தலைமைக் கட்டடங்கள் இரண்டு அமைக்கப்பட வேண்டும் (அக் கட்டடம் அமைக்கப்பட வேண்டிய விதம் பற்றி பின்னொரு தரம் சொல்லுகிறேன்.)

■ அவற்றில் மாதம் ஒரு தரமேனும் முக்கிய உறுப்பினர்கள் ஒன்று கூடி நிகழ்கால, எதிர்காலப் பிரச்சினைகள் பற்றி ஆராய வேண்டும்.

■ இனத்தின் மேல் அக்கறையும் தீர்க்கதரிசன முமுள்ள, சமூக உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, முக்கிய விடயங்களில் அவர்களின் ஆலோசனைகளைப் பெற வேண்டும். நாடாளுமன்றப் பதவிக்கான தேர்வின் போது கூட அவர்களின் கருத்துக்கு இடமளிக்க வேண்டும்.

■ 'கோடிகளால்' அமைந்த ஒரு பெரும் பணத்தொகையைக் கட்சிக்கான நிரந்தர வைப்பு நிதியாய் உருவாக்க வேண்டும். புலம்பெயர்ந் தோரிடம் அவ்வப்போது சென்று பிச்சையெடுக்காமல், இந் நிதிக்காக ஒருதரம் கையேந்தலாம். இந்த வைப்புநிதியை உயர்த்துவதில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வரையறுக்கப்பட்ட உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

■ கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான வழிமுறை ஒன்றைச் செயற் படுத்த வேண்டும். அதில் நாடாளுமன்ற உறுப்பி னர்களைப் பெரும் பங்காற்றச் செய்ய வேண்டும்.

■ அவசியம் ஏற்பட்டாலேயன்றி இரண்டு தரத்திற்கு மேல் ஒருவருக்கு பராளுமன்றப் பதவி வழங்கப்படாமல் இருக்க வழி செய்ய வேண்டும். முதல் பதவிக்காலத்தின் செயற்பாட்டின் அடிப்ப டையிலேயே இரண்டாவது பதவிக்காலத்தை வழங் குவது பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

■ அரசினால் தொகுதிக்கு வழங்கப்படும் நிதியைச் செலவளிக்கும் விதம் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறிக்கை பெறப்பட்டு, கட்சி அனுமதி வழங்கிய பின்பே அதனை அவர்கள் செயல்படுத்த அனுமதியளிக்க வேண்டும்.

■ முக்கிய விடயங்களில் கருத்துரைக்கவென, கட்சியால் அனுமதிக்கப்பட்ட, அறிவாற்றல் மிக்க ஓர் உறுப்பினர் குழுவினை நியமிக்க வேண்டும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

■ கட்சிக் கட்டுப்பாடடை மீறி நடப்பவர் எவரானாலும் உடனடியாக அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

■ கல்வி , பொருளாதாரம், பண்பாடு ஆகிய வற்றின் வளர்ச்சியை முன்னெடுக்க கட்சியின் சார்பிலான அறிஞர் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

■ அரசுடனும், வெளிநாடுகளுடனும் பேசுவதற் குத் தகுதிபெற்ற ஓர் குழுவினை நியமிக்க வேண்டும்.

இன்னும் எத்தனையோ சொல்லலாம். முதலில் இவற்றையாவது செய்கிறார்களா பார்ப்போம். இவற்றையெல்லாம் செய்தால் கட்சியும், புதிய தலைவரும் பலம் பெறுவார்கள் என்பது மட்டும் நிச்சயம். என்ன? அதற்கு தேர்ந்தெடுக்கப்படும் புதிய தலைவருக்கு முதுகெலும்பு பலமாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

**சல்லடையார் சலிப்பு :- 'அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார்கேள்வி :- அண்ணாமலைக்கு நீங் கள் போட்ட புள்ளியைப் பார்த்து உங்களைப் பலரும் திட்டித் தீர்க்கிறார்கள். உங்களுக்கேன் இந்த வேலை? 'எவரும் எக்கேடும் கெட்டுப் போகட்டும்' என்று சும்மா இருக்க வேண்டியது தானே?**

**உலக்கையார் பதில் :-** இந்தப் பிறவியை நான் அர்ப்பணித்தது சும்மா இருக்கத்தானா? எல்லாரும் இப்படிச் சிந்திப்பதாற்தான் நம் இனம் வீழ்ந்து கொண்டு போகிறது. கோவலன் இறந்ததும் 'சான்றோரும் உண்டு கொல் சான்றோரும் உண்டு கொல்' என்று கேட்டபடிதான் சிலம்போடு மது ரைக்குள் கண்ணகி நுழைகிறாள். ஒரு பிழை நடந்தால் அதனைப் பார்த்திருந்த குற்றம், அவ் இனத்தைச் சார்ந்த சான்றோருக்கும் உண்டாகும் என்பதைத்தான் இளங்கோவடிகள் கண்ணகியின் கூற்றாக நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

உடனே நீர் பெரிய சான்றோரா? எனக் கேட்டுக் கிண்டல் அடிப்பீர்கள். அதனை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரை உலகெங்கும் வாழும் தமிழர்களின் உயர்விற்காக, அவ்வப்போது தோன்றும் எனது மன எண்ணங்களை நேர்மையாய்ப் பதிவுசெய்ய வேண்டும் என்பதனை, எனக்கான தர்மமென நினைத்திருக்கிறேன். அக் கருத்துரைப்பில் எவரையும் வலிந்து உயர்த்த வேண்டும் என்ற எண்ணமோ, எவரையும் வலிந்து தாழ்த்த வேண்டும் என்ற எண்ணமோ நிச்சயம் இருக்காது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

என்னால் வாசகர்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் தாங்கள் விரும்புவதை நான் பாராட்டி எழுதினால் மகிழ் கிறார்கள். தாங்கள் வெறுப்பதை நான் பாராட்டி எழுதினால் கோபிக்கிறார்கள். நான் எனது கருத் தைத்தான் எழுத முடியுமே தவிர, அவர்களின் விருப்பத்தை எப்படி எழுத முடியும்?

இவர்களின் மனநிலை தெரிவதால், என் மீதான திட்டுக்களும், வாழ்த்துக்களும் நிரந்தரமற்றவை என்பதை உணர்கிறேன். அதனால் தான் இத்தகைய திட்டுக்களையும் தாண்டி என்னால் எழுத முடிகிறது. நான் நினைத்தால் என்னைத் திட்டிய அத்தனை



பேரையும் ஒரே பதிலின் மூலம் என்னை வாழ்த்தவும் செய்ய முடியும். அப்படிச் செய்தால் நான் எழுத்துப் 'பரத்தை' ஆகிவிடுவேன். மற்றவர்கள் வாழ்த்தி நான் உயரப்போவதும் இல்லை, மற்றவர்கள் தூ ற்றி நான் தாழப்போவதும் இல்லை.

**சல்லடையார் சலிப்பு - 'நான் பேச நினைத்த தெல்லாம் நீ பேச வேண்டும்'**

✦✦✦✦✦✦✦✦✦✦

# ஹட்டனில் குளவிக் கொட்டுக்கு இலக்கான வயோதிப மாது வைத்திய சாலையில் மரணம்

**(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)**

ஹட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள பட்டல்கல தோட்டத்தில் தோட்டக் காரி யாலயப் பகுதியில் வைத்து நேற்று முன் தினம் மாலை குளவி கொட்டுக்கு இலக் கான 7 பேர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லபட்டு அங்கு சிகிச்சைக்குச் சேர்க் கப்பட்டனர். அவர்களில் ஒருவ ரான 78 வயதுடைய சதாசிவம் சிந்தை என்ற பெண் பின்னர் மரணித்து உள் ளார்.

மற்றைய 6 பேரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் 14 வயது உடைய சிறுவன் ஒருவனும் அடங்குகின்றான் என டிக் கோயா கிளங்கன் வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித் தார்.



குளவி கொட்டுக்கு இலக்கான பெண் அதி சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என அவர் தெரிவித்தார்.



# வன ஜீவராசிகளால் பாதிப்புற்றோருக்கு போரதீவுப்பற்றில் நிவாரணம் வழங்கல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

வன ஜீவராசிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது காட்டு யானைகளின் தாக்குதலினால் உயிரிழந்த நபர்கள், சேதமடைந்த பயிர்கள் மற்றும் வீடுகள் என்பவற்றின் குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு பிரதேச செயலாளரினால் நிவாரணமாக காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன.

வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் இந்நிவாரண தொகையைப் பிரயோசனமான முறையில் பயன்படுத்துமாறு ஆலோசனையும் வழங்கப்பட்டது.






# மலையக ரயில் சேவை பாதிப்பு

(மஸ்கெலியா நிருபர்: செ.தி. பெருமாள்)

நேற்றுக்காலை பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற உடரட்ட மெனிக்கே ரயில் ரதல்ல கிரேட் வெஸ்டன் பகுதியில் தடம் புரண்டது. இதனால் மலையகப் பகுதிகளுக்கான ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள் ளது.





# வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க













# விடை பெறும் நியூசிலாந்து தூதருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு



இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் அப்பிள்டன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் மக்களை ஒடுக்கி அதிக வரி விதிக்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. வரி விதிக்காமல் அரச வருமானத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்தும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைத்துள்ளது என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் விசனம் தெரிவித்துள்ளார்.

# மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 440 கோடி டொலர்களாக அதிகரிப்பு




இலங்கையின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு கடந்த டிசம்பர் மாதத்தில் 4.4 பில்லியன் (440 கோடி) அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 23.2 சதவீத அதிகரிப்பாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சீனாவின் பரிமாற்று நிதிவசதியின் கீழ் பெறப்பட்ட 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களும் அடங்குவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




# பத்துப் புனிதர்களின் திருப்பண்டங்களை கொண்ட புராதன பேழை திருமலையில்!

## புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் கண்டுபிடிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

ஆசியாவில் முதன் முறையாக பத்துப் புனிதர்களின் உடற்பாகங்கள் உள்ள திருப்பண்டங்களை உள்ளடக்கிய புராதன பேழை ஒன்று கடந்த புதனன்று, திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் திருகோணமலை மறை மாவட்டத்தின் சின்னக்கடை பங்கு என அழைக்கப்படும் புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தின் பங்கு குருமனையில் இருந்த இரும்புப் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்தே இப்புனித பண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன எனப் பங்கு குருவானவர் அருட்பணி எஸ்.ஆர்.ஜெயரட்ணம் கூறினார்.

கண்டெடுக்கப்பட்டுள்ள புனித பண்டங்கள் பத்து ஓர் ஆலயத்தில். ஒரே இடத்தில் கண்டறிப்பட்டுள்ளமையானது இலங்கையிலும் ஆசியா முழுவதிலும் இதுவே முதற் தடவை என அறியமுடிகின்றது.

ஒன்று அல்லது இரண்டு புனித பண்டங்கள் மட்டுமே ஆலயங்களில் இருப்பது சாதாரண நடைமுறை என்றும், ஆனால் இவ்வாறு பத்துப் புனித பண்டங்கள் ஓர் ஆலயத்தில் இருப்பது தாம் அறிந்தவரையில் இதுவே முதல் முறை எனவும் பங்குக் குருவானவர் கூறினார்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகமான ரோமின் வத்திகானிலிருந்து இப்புனித பண்டங்கள் எந்த ஆண்டில் திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்டன என்பது குறித்த வரலாற்றுப் பதிவுகள் எதுவும் ஆலயத்தில் இல்லை எனவும் அறிய முடிகின்றது.

மெக்ஸிக்கோ நாட்டின் குவாடலூப்பே என்ற கிராமத்தில் புனித மரியாள் காட்சி அளித்தமையை அடுத்து புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் அங்கு அமைக்கப்பட்டது.

போர்த்துகீசர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களால். இலங்கையில் முதற் தடவையாக திருகோணமலை குவாடலூப்பே அன்னை ஆலயம் அமைக்கப்பட்டது.

இப் புனித பண்டங்களை தற்போது பெருந்தொகையான கத்தோலிக்கர்களும் ஏனையோரும் தரிசித்து வருகின்றனர்.









# திருகோணமலை - கொழும்பு இடையிலான குளிரூட்டப்பட்ட ரயில் சேவை நாளை முதல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

திருகோணமலைக்கும் கொழும்பு புறக்கோட்டைக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட ரயில் சேவை நாளை 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக திருகோணமலை பிரதான ரயில் நிலைய அதிபர் தி.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு புறக்கோட்டையிலிருந்து அதிகாலை 5.45 மணிக்குப் புறப்படும் இந்த ரயில் திருகோணமலையை முற்பகல் 11.45 மணிக்கு வந்தடையும். மீண்டும் மதியம் 12.35 மணிக்கு திருகோணமலையிலிருந்து பயணிக்கும் இந்த ரயிக் பிற்பகல் 6.35 மணிக்கு கொழும்பு புறக்கோட்டையை வந்தடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேயிலைக்கான உரக் கொள்வனவிற்கு வட்டியில்லா கடன் வழங்க நடவடிக்கை

தேயிலைக்கான உரத்தை கொள்வனவு செய்வதற்கு வட்டியில்லாக் கடனை வழங்க விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கடந்த காலங்களில் உரப்பற்றாக் குறை காரணமாக தேயிலை அறுவடையில் ஏற்பட்ட பாதிப்பை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்துள்ளார்.

தேயிலை நிதியில் இருந்து தேவையான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு தேயிலை அறுவடை 260 மில்லியன் கிலோ கிராமாக காணப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது கடந்த ஆண்டை விட சுமார் 40 மில்லியன் கிலோ கிராம் குறைவாகும்.

உரிய முறையில் உரமிடுவதன் மூலம் அடுத்த 06 மாதங்களுக்குள் தேயிலை விளைச்சலை 90 மில்லியன் கிலோ கிராமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்துள்ளார்.





# பேராதனை பல்கலையில் ஒருவருக்குக் கொரோனா

பேராதனை பல்கலைக்கழக ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் பல்கலைக்கழக சமூகத்தினர் முகக்கவசம் அணிய வேண்டும் எனப் பல்கலைக்கழக சுகாதார நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் காய்ச்சல், தடிமன் என வந்த செனட் காரியாலய ஊழியருக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்த நபர் உடனடியாக பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# இலங்கைத் தமிழரசுக் கட்சி 17வது தேசிய மாநாடு - 2024

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 2023ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட தீர்மானப் படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27, 28 ஆம் நாட்களில் 686/11, என்.சி.வீதி, உப்புவெளி, திருகோணமலை என்னும் முகவரியில் அமைந்துள்ள ஜேகப் பீச் றிசோட் (JKAB BEACH RESORT) மண்டபத்தில் நடைபெறும். கட்சியின் தலைவர் திரு.மாவை.சோ.சேனாதிராசா அவரக்ளின் தலைமையில் நடைபெறும். மேற்படி மாநாட்டுக் கூட்டம் மு.ப.10.00 மணிக்குத் தொடங்கி நடைபெறுமென்பதை கட்சி அமைப்பு விதி 10(உ) இற்கு அமைவாக இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

நன்றி

**பத்மநாதன் சத்தியலிங்கம்,**
**பொதுச்செயலாளர்,**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
**30.12.2023.**

**இல.30, மாட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு புவியியல் பேராசிரியர்கள் மௌனம் ஏன்?

## ரெலோ யாழ் அமைப்பாளர் சபா குகதாஸ் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு பாரிய ஆபத்து என சுட்டிகாட்டியுள்ள வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ அமைப்பின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான சபா குகதாஸ், இந்த விவகாரத்தில் புவியியல் பேராசிரியர்கள் மௌனம் காக்கக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச பொன்னாவெளி பகுதியை மையமாக கொண்டு சுண்ணாம்புக்கல் அகழ்வதற்கும் சிமெந்து தொழிற்சாலை அமைப்பதற்கும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அகழ்வுப் பணி நடைபெற்றது. பின்னர் வனவளத் திணைக்களம் தலையிட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் மக்கள் ஐந்து மாதங்களைக் கடந்து போராடு



கின்றனர்.

சுண்ணக்கல் அகழ்வு தொடர்பாக தடுப்பதற்கு அரசியல்வாதிகள் மக்களுடன் நின்று ஊடகங்களுக்கு அறிக்கை விடுவது மட்டும்தான் நடைபெறுகிறது.

ஆனால் இதனைத் தடுப்பதற்கான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் மற்றும் புவியியல் சார்பான விளக்கங்கள் உரிய நிபுணர்கள் அல்லது விரிவுரையாளர்கள் போன்ற தரப்பால் இதுவரை அரசாங்கத்தை நோக்கியோ அல்லது பொதுவாகவே முன் வைக்கப்படவில்லை.

யாழ், கிளிநொச்சி மாவட்ட புவியியல் சார்பு கல்விமான்கள் மௌனம் காப்பது நல்லதல்ல. புவியியல் ரீதியாக யாழ்ப்பாண பாறை அமைப்பு மயோசின் கால சுண்ணக்கல் வகைக்குரியதாகும்.

அத்துடன் இளமடிப்பு பாறை வகைக்கு உரியதாகவும் காணப்படுவதால் இப்பிரதேசத்தில் பாரிய அகழ்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டால் மிகப் பெரிய பாதிப்பு அப்பகுதியில் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது.

இதனை மையமாக கொண்டு புவியியல் பேராசிரியர்கள் இவை தொடர்பான கருத்துக்களை வெளியிட வேண்டும்.

காப்பிரேட் கம்பனிகளினால் உலகில் பல இடங்கள் பாலை வனங்களாகவும் மக்கள் வாழ முடியாத பிரதேசங்களாகவும் மாறி வருவதை போன்று எதிர் காலத்திலும் பொன்னாவெளி பிரதேசம் மாறி விடும். – என்றார்.

# நாடளாவிய ரீதியில் நேற்று முதல் விசேட போக்குவரத்துச் சோதனை

நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யுக்திய சுற்றிவளைப்பிற்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போக்குவரத்து சோதனை நடவடிக்கை நேற்று முதல் ஒரு வாரத்திற்கு அமுலில் இருக்கும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலை முறியடிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

ஹப்புத்தளை வை சந்தியில் நேற்று காலை முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வெளி மாகாணங்களிலிருந்து பண்டாரவளை, பதுளை நகரங்களுக்கு வருகை தரும் பஸ்கள் பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியுடன் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பரிசோதனை மேற்கொண்ட வாகனங்களுக்கு அடையாள ஸ்டிக்கர் ஒன்றும் ஒட்டப்பட்டது.

பண்டாரவளை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபன முன்னிலையில் இந்த சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.





# வெருகலில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட 662 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

## திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில்

அண்மையில் வெருகலில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட 662 குடும்பங்களுக்குத் திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. சண்முகம் குகதாசன், செயலாளர் திரு.கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் முதலியோர் இவற்றை வழங்கி வைத்தனர்.

வெருகல் பிரதேச செயளாலர் திரு. அனாஸ், வெருகல் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சுந்தரலிங்கம் மற்றும் உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்த வழங்குகைகளுக்கான அனுசரணையைக் கனடாத் திருக்கோணமலை நலன்புரிச் சங்கம், கனடா மொன்றியல் திருமலை ஒன்றியம் ஆகியன வழங்கின என்பது குறிப்பிடத்தக்கது.





# இன்றைய ராசி பலன்கள் - 06.01.2024




உங்களிடம் காணப்படும் நேர்மறையான எண்ணம் காரணமாக இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் போக்கில் இருக்கும் உறுதி காரணமாக நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கையிலுள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் இன்று சற்று மந்தமாக செயல்படுவீர்கள். சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். இன்று நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணியின்போது சில ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திப்பீர்கள். உங்கள் சகபணியாளர்களுடனான தொடர்பும் சுமூகமாக இருக்காது.

உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதங்கள் செய்ய நேரலாம் இதனை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று செலவினங்களை தவிர்க்க இயலாது. உங்கள் செலவுகளை கட்டுபடுத்துவது சிறந்தது.

உங்களின் உற்சாகமான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. இன்று நீங்கள் பதட்டப்படுவதை தவிர்க்க வேண்டும்.

பணியில் உங்கள் சகபணியாளர்களால் சில தொல்லைகளை எதிர்கொள்வீர்கள். பொறுமையாக பணியை மேற்கொள்ளுங்கள்.

தகவல் பரிமாற்ற குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வேறுபாடுகளை சரி செய்து கொள்ள வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிக்க நீங்கள் பணம் கடன் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இதனால் அமைதி இழப்பீர்கள். பிரார்த்தனை மற்றும் இசை கேட்பதற்கு நேரம் ஒதுக்குவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

பணியில் சில சவால்களை சந்திக்க நேரும். உங்கள் நிறுவனத்தில் முதன்மை வகிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துனையிடமிருந்து தனித்திருப்பது போல உணர்வீர்கள். ஆனால் இது வெறும் உணர்வு மட்டுமே. உண்மையில் உங்கள் துணை உங்களிடம் அன்பாக இருப்பார்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். பண விஷயங்களைக் கையாளும்போது விழிப்புடன் இருக்க வேண்டும்.

இன்று தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்கள் முயற்சிகள் இன்று எளிதில் வெற்றி அடையும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி காண்பீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக தொழில் சார்ந்த முறையில் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் லாபம் காணலாம்.

இன்று தைரியமான மனநிலை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையுடன் சரியான போக்கில் உங்கள் செயல்களை செய்வது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். ஒருவரையொருவர் புரிந்துகொள்ள இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகளும் செலவுகளும் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது.

இன்று குறைந்த அளவு ஆரோக்கியமே காணப்படும். உயரமுத்தம் காரணமாக அமைதியின்மை காணப்படும்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பதை கடினமாக உணர்வீர்கள். தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

பணியைப் பொறுத்த வரை சற்று சரிவு நிலை காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை கையாள்வதன் காரணமாகச் சில வசதிகளை அனுபவிக்க முடியும்.

உங்கள் மனதில் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். ஆன்மீக விஷயங்களுக்காக செலவு செய்ய நேரலாம்.

தோல்களில் எரிச்சல்கள் காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதைத் தவிர்க்கவும்.




இன்று இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

இன்று நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளின் தாமதம் உங்கள் மேலதிகாரிகளின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உங்கள் மனதில் அகந்தைப் போக்கு காணப்படும். உறவில் நல்லிணக்கம் பேண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று திடீரென பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் நஷ்டம் ஏற்படாமல் இருக்க நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

பதட்டம் மற்றும் கால் வலி பாதிப்பு இன்று காணப்படும். எனவே பதட்டமின்றி அமைதியாக இருக்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.01.2024




இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் அனைத்து செயல்களையும் குறித்தநேரத்தில் வெற்றிகரமாக முடிப் பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள். புதுமையான கருத்துக்கள் மூலம் நீங்கள் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த முறையில் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் வீட்டில் நடைபெறவிருக்கும் ஒரு சுப நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் கலந்தா லோசிப்பீர்கள்.

உங்களின் நிதி சம்பந்தமான விருப்பங்கள் நிறை வேறும். இன்று அதிக பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று உங்களிடம் காணப்படும் மன வலிமை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சவால்கள் நிறைந்திருக்கும் என்பதால் நீங்கள் எதையும் பொறுமையாக கையாள வேண்டும். இசை மற்றும் பொழுதுபோக்கு விஷ யங்களில் பங்கு கொள்வதன் மூலம் பலன் அடையலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திக்க நேரும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சில பிரச்சினைகள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாக தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் பதட்ட உணர்வை உங்கள் துணையிடம் காண்பிக்க நேரலாம். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்குச் சிறிது கவலையை அளிக்கும்.




உங்கள் வலுவான திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். அதன் மூலம் வெற்றி காண்பீர்கள் கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் வெற்றி காண் பீர்கள்.

கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்து ணர்வு காணப்படும்.

இன்று நிதி நிலைமை போதிய அளவு காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். நீங்கள் பங்கு வர்த்தகத்தில் ஈடுபடலாம். அது உங்களுக்கு லாபம் தரும்.




இன்று நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றி காண்பீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்ப ர்கள் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

உங்கள் பணியில் திருப்திகரமான பலன்கள் காண்பிப்பீர்கள். உங்களுக்குள் இருக்கும் திறமையை வெளிப்படுத்தி தரமாக பணியாற்றி தருவீர்கள்.

நீங்கள் அன்புவயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று அதிக பணம் பராமரிக்க இயலும். நிதி விஷ யத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க நேரலாம்.

இன்று தொடை வலி அதிகமாக காணப்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.








# ரூ.319 கோடி பெறுமதியான ஹெரோயின், ஐஸ் ஹிக்கடுவைக்கு அப்பால் ஆழ்கடலில் சிக்கின!

## பல நாள் மீன்பிடிப் படகில் இருந்த இலங்கையர் அறுவரும் கைது

**(ந.லோகதயாளன்)**

சுமார் 319 கோடி ரூபா மதிப்புடைய 245 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் மற்றும் கிரிஸ்டல் மெத்தம் பெட்டமைன்(ஐஸ்) போதைப் பொருளை ஏற்றிச் சென்ற பல்நாள் மீன்பிடி இழுவை படகு ஒன்று கடற்படையினரால் ஹிக்கடுவைக்கு மேற்கே கடலில் வைத்து வழிமறிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹிக்கடுவைக்கு மேற்கே 28 கடல் மைல் (50 கிமீ) தொலைவில் உள்ள கடலில், போதைப் பொருள்களை ஏற்றிச் சென்ற உள்ளூர் பலநாள் மீன்பிடி இழுவைப் படகை இலங்கைக் கடற்படையினரின் விரைவுத் தாக்குதல் படகு நேற்று முன்தினம் இடைமறித்துத் தடுத்து நிறுத்தியுள்ளது.

நேற்றுக் காலை காலி துறைமுகத்திற்கு படகு கொண்டு செல்லப்பட்டது. இலங்கைக் கடலோரக் காவல்படையின் ஒருங்கிணைப்புடன் அது பரிசோதிக்கப்பட்டது. அப்போது அதிலிருந்து மொத்தம் எட்டு சாக்குகளில் 130 பொதிகளில் சுமார் 189 கிலோ 388 கிராம் ஐஸ் மற்றும் 48 பொதிகளில் சுமார் 55 கிலோ 648 கிராம் ஹெரோயின் ஆகியன மீட்கப்பட்டன. அந்த மீன்பிடி இழுவை படகில் இருந்த இலங்கை பிரஜைகள் 06 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

காலி, பேருவளை மற்றும் கல்கமுவ பிரதேசங்களைச் சேர்ந்த - 28 வயதுக்கும் 66 வயதுக்கும் இடைப்பட்ட - இந்த சந்தேகநபர்கள் இழுவை படகு மற்றும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் பிற புலனாய்வுப் பிரிவுகளின் ஒருங்கிணைந்த உளவுத்துறை முயற்சிகளின் விளைவாக இந்த சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா நேற்றுக் காலை காலி துறைமுகத்தை படகு வந்தடைந்தவுடன் கைப்பற்றப்பட்ட பொருள்களை நேரில் சென்று பார்வையிட்டார்.





